விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

பேலியகொடையிலுள்ள இறப்பர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் (RPD & SC) CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்

பேலியகொடையிலுள்ள இறப்பர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் (RPD & SC) CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.

பெறுகை இல	பெறுகையின் பெயர்	விலைமனு பிணைமுறி	மீளளிக்கப்படாத விலைமனு / கட்டணம்
T/29/2026	பேலியகொடையிலுள்ள இறப்பர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் (RPD & SC) CCTV கண்காணிப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்	20,000.00	3,500.00

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் (NCB) ஊடாக இப்பெறுகை நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள், 2026/11/17 முதல் 2026/12/02 வரை பொது வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்து பார்க்க முடியும் மேலதிக தகவல்களை மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, உதவிப் பணிப்பாளர் (விநியோகம்), விநியோகப் பிரிவு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனுக்கோரல் ஆவணங்களை கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இணையதளமான www.industry.gov.lk மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் இணையதளமான www.idb.gov.lk ஆகியவற்றிலும் பார்வையிட முடியும். (பார்வையிடுவதற்கு மாத்திரம்). எனினும், விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது, மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களையே விலைமனுதாரர்கள் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2026/11/17 முதல் 2026/12/01 வரை பொது வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை, மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூ. 3,500/- கட்டணத்தை பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியை பெற்றுக் கொள்ளலாம்

4. விலைமனுக்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி ஆகியவை 2026/12/02 அன்று மு.ப. 11.30 மணிக்கு முன்னர், மொரட்டுவை, கட்டுபெத்த, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையிலுள்ள விலைமனுப் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம், மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி மற்றும் நேரம் முடிவடைந்தவுடன், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகக் கூட்ட மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். இதில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் பங்கேற்கலாம். விலைமனுவைக் கொண்டிருக்கும் உறையின் மேல் இடது மூலையில் விலைமனுவின் பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

5. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் வரை செல்லுபடியாகும் வகையில் இருக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு விலைமனுவுடனும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான விலைமனு பிணைமுறி இணைக்கப்பட வேண்டும். குறித்த விலைமனு பிணைமுறி 2027/03/03 வரை செல்லுபடியாகும் வகையில் இருக்க வேண்டும். செல்லுபடியாகும் விலைமனு பிணைமுறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

6. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2026/11/23 அன்று மு.ப. 10.00 மணிக்கு, மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

7. மேலதிக விபரங்களுக்கு, உதவிப் பணிப்பாளர் (வழங்கல்) தொலைபேசி: 011-2607004 (நீடிப்பு இலக்கம்: 146) மின்னஞ்சல்: supplyidb@gmail.com அல்லது உதவிப் பணிப்பாளர் – RPD & SC, பேலியகொடை. தொலைபேசி: 011-2930747 ஆகியோரை தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (சிரிய)
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
இல. 615, காலி வீதி,
கட்டுபெத்த, மொரட்டுவை.

தொலைபேசி/தொலைநகல்: 011-2607004